**கவனிக்க**.-*23.09.2022 ஆந் திகதிய 2299 ஆம் இலக்க, வர்த்தமானியின் பகுதி I: தொகுதி II (அ) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2300 - 2022 සැප්තැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2022.09.30**

*2300 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 268 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | 271 |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2022, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

267 - B 082386 - 353 (2022/09)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தினை இரத்துச்செய்வதற்கான - (104 ஆம் பிரிவு) அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில் பஸ்பாகே கோரளே பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) ஆர். எம். ஷமீர நுவன் ரத்னாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1995.11.04 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/பஸ்/730 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய இம்புல்பிட்டிய என்ற முகவரியில் வசிக்கும் சமரகோன் முதியன்சேலாகே தென்னகோன் அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எ05/ 76 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.11.13 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்த போதிலும் அவர் பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.10.30 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.*

**அட்டவணை**

*கண்டி நிருவாக மாவட்டத்தில் பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் பஸ்பாகே கோரளை இம்புல்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில் ஹோல்கம என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 61/22/2 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் .. இலக்க துண்டாடப்படும் வரைபடத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட முபி. மஹ 2299 ஆம் இலக்க நிரல் குறிப்பில் 46 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 0.101 ஹெக்டயார்கள் ஏக்கர்கள் ..... றூட்கள் ..... பேர்ச்சு ...... விஸ்தீரணத்தை உடையதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி இம்புல்பிட்டிய தோட்டம்.*

வடக்கு : 44 ஆம் காணித்துண்டு;
கிழக்கு : 44, 45, 54 ஆம் காணித்துண்டு;
தெற்கு : 43 ஆம் காணித்துண்டு;
மேற்கு : 43 ஆம் காணித்துண்டு.

ஆர். எம். எஸ். நுவன் ரத்னாயக்க,
பிரதேச செயலாளர்,
பிரதிகாணி ஆணையாளர்,
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட),
பஸ்பாகே கோறளே.

*2022, பெப்புருவரி 25.*

*09 - 351/1*

---

*பின்னிணைப்பு - 09*

## காணி அணையாளர் நாயகத் திணைக்களம்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தினை இரத்துச்செய்வதற்கான - (104 ஆம் பிரிவு) அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) காணி ஆணையாளர் / பிரதிக் காணி ஆணையாளர் ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் மாண்புமிகு சனாதிபதி அவர்களினால் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து ஒன்பதாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் இருபத்தோராம் திகதி வழங்கப்பட்டுள்ள க/கொத்/தொர/பிர/கொ/225 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய தொரகலவில் வசிக்கும் மாப்பல்கம ஆச்சாரிகே எரமானிஸ்ஹாமி அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல்.டீ.ஓ.சீ.5/146 ஆம் இலக்கத்தின் கீழ் 1989.11.09 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள*

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2022.10.30 ஆந் திகதிக்கு முன்னர். எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.*

**அட்டவணை**

*கண்டி நிருவாக மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் சுந்துகர இஹல கோரளேயில் 307 புஸ்ஸெல்லாவ கிராம அலுவலர் பிரிவில் புஸ்ஸெல்லாவ இஹலகம என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 61/18/2, 61/191 ஆம் இலக்க களப் பத்திரத்தில் மு. பி. மஹ. 2943 ஆம் நிரல் இலக்க மற்றும் 34 எனும் காணித்துண்டு இலக்கத்தினைக் கொண்ட காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 0.177 ஹெக்ரயார்கள் அளவான விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்ட அரச காணி: தொரகல.*

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் - 36 மற்றும் காணித்துண்டு இலக்கம் - 1 (வீதி);*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கம் - 1 (வீதி) மற்றும் காணித்துண்டு இலக்கம் - 12;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கம் - 12 மற்றும் காணித்துண்டு இலக்கம் 35;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் - 35 மற்றும் காணித்துண்டு இலக்கம் 36.*

ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத கம்பளை.

*2022, திசெம்பர் 08.*

*09 - 351/2*

---

இணைப்பு - 09

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 வது பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்பு ஒன்றினை இரத்து செய்தல் - (பிரிவு 104) தொடர்பான அறிவித்தல்**

*வடமத்திய மாகாண சபை எல்லைக்குள் அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கணை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர், பிஹிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19 (4) இன் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களால் 1996.01.10 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அனு/ ராஜா/ பி/ 1414 இன் உரித்துக்காரரான ராஜாங்கனை, வட்டார இலக்கம் 01 இல் வசிக்கும் வருசமான பேடிகே சுபனேரிஸ் என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்ட காணிப் பதிவாளர் காரியாலயத்தில் இலக்கம் 2604 இன் கீழ் 2000.05.09 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில், காட்டப்பட்டுள்ள காணித் துண்டுக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவரை நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ள போதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ள போது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 104 இன் கீழ் ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்வு கூறல் இருப்பின் அதுபற்றி 2022.10.28 திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.*

**அட்டவணை**

*அநுராதபுரம் நிர்வாக மாவட்டத்தில் ராஜாங்கணை பிரதேச செயலாளர் பிரிவில் எப்பாவள கோரளே, இல. 442 கிராம அலுவலரின் பகுதியில் உள்ள ரொட்டவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள 10 ஆம் இலக்க களத்தாளில் 434 ஆம் இலக்க இ. கொ. வ. துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 1229 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான ஏக்கர்: 00 றூட்: 01 (ஒன்று) பேர்ச்: 38 (முப்பத்தெட்டு) பரப்பளவுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித் துண்டு (மேட்டு நிலம்).*

வடக்கு : இல. 1256 - குடியேற்றப்பாதை ஒதுக்கம்;
கிழக்கு : இல. 1230- காணித்துண்டு;
தெற்கு : இல. 1234 - நீர்ப்பாசன வாய்க்கால் ஒதுக்கம்;
மேற்கு : இல. 1228- காணித்துண்டு.

பீ. ஜீ. சுனில் அபேகோண்,
பிரதேச செயலாளர்
இராஜாங்கணை.

2022, சனவரி 10.

09 - 372

---

இணைப்பு - 09

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 வது பிரிவின் (4) வது உப வாசகத்தின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தலுக்கான (பிரிவு 104) அறிவித்தல்.**

ஊவா மாகாணத்தின் மொணராகலை மாவட்டத்தின் புத்தல பிரதேச செயலகப் பிரிவில் பிரதேச செயலாளர்/ பிரதி காணி ஆணையாளர் (உள்ளூராட்சி) R. M. R. S. திலக்கரட்ண ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் 19 (4) உப வாசகத்தின் கீழ் அதி மேதகு சனாதிபதி அவர்களினால் 02 நவெம்பர், 1995 ஆம் திகதி கையளிக்கப்பட்ட இல. மொ/பிர 9322 உடைய அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான R. B. M. சுதுபண்டா அவர்களுக்கு கையளிக்கப்பட்டு மொணராகலை மாவட்ட பதிவாளர் காரியாலயத்தின் இல. LDO/M7/75 கீழ் 14.11.1995 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு அடுத்துறுபவராவதற்கு சட்டபூர்வ உரிமையாளர் இல்லாதவிடத்து அல்லது உரிமையுள்ளவர் இருந்தாலும் அவருக்கு அடுத்துறுபவராவதற்கு விருப்பமின்மையினால் அடுத்துறுபவர் ஒருவரை நியமிப்பதற்கு இல்லையென அறிக்கையிடப்பட்டுள்ளதென்பதுடன், அவ் அளிப்புப் பத்திரம் குறித்த சட்டத்தின் 104வது வாசகத்தின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதென இத்தால் அறிவிக்கின்றேன். இது பற்றிய ஏதேனும் எதிர்ப்புக்கள் இருக்குமெனின் அதனை 2022.10.28 ஆந் திகதிக்கு முன்பதாக எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

மொணராகலை நிர்வாக மாவட்டத்தில் புத்தல பிரதேச செயலகப் பிரிவில் புத்தல கோரளையில் ஒக்கம்பிட்டிய கிராம அலுவலர் பிரிவில் ஒக்கம்பிட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான மொணராகலை நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பிலுள்ள மற்றும் மொணராகலை நில அளவையாளர் அவர்களால் தொகுக்கப்பட்ட இலக்கம் இ. கி. வ. 54 உடைய வரைபட இலக்கம் 807 உடைய நிலத்துண்டாக காட்டப்பட்டுள்ளதுமான, அளவில் ஹெக்ரயார் 0.719 உடைய அளவு கொண்டதுமான, கீழ் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் எல்லைகளையுடைய அரச காணி.

வடக்கு : காணித்துண்டு இல. 818;
கிழக்கு : காணித்துண்டு இல. 818;
தெற்கு : காணித்துண்டு இல. 808, 809 மற்றும் பாதைக்கான ஒதுக்கீடு;
மேற்கு : பாதைக்கான ஒதுக்கீடு மற்றும் காணித்துண்டு இல. 818.

ஆர். எம். ஆர். எஸ்.திலக்கரட்ண,
பிரதேச செயலாளர்
பிரதி காணி ஆணையாளர்
(உள்ளூராட்சி),
புத்தல.

2022, மே 19.

09 - 373

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/15421.
மாகாணக் காணி ஆணையாளரின் இல : NWP/ PLC/ L9/ AN/LTL/03.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, இல. 656 பி தம்மன்னாகம கிராமஅலுவலர் பிரிவைச் சேர்ந்த தோனிகல எனும் கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவைப்படம் எப். ரி. பி. 02 (ஓ/பு/331) இன் பிற்சேர்க்கை இல. 21 இல் காணித்துண்டு இலக்கம் '552' மற்றும் 0.6960 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்கு தருமாறு கேட்டு ஸ்மார்ட் சேர்ட்ஸ் (லங்கா) லிமிட்டட் விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :- எப். ரி. பி. 02 (ஓ/பு/331) இன் பிற்சேர்க்கை இல. 21 இல் காணித்துண்டு இலக்கம் 552 இன் எல்லைகள்

வடக்கு : காணித்துண்டு இல. 551 மற்றும் 533;
கிழக்கு : காணித்துண்டு இல. 533 மற்றும் 553;
தெற்கு : காணித்துண்டு இல. 553;
மேற்கு : காணித்துண்டு இல. 551.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2022.08.17 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி)

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் வருடத்திற்கான காணியின் பிரதான விலைமதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000/-) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில், காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை. 2022 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000/-) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடகாலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப்பணத்தின் 20% கூட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளர்/ மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக்காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேசச் செயலாளர்/மாகாணக்காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரார் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2022.08.17 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்கின்ற கீழ்க்குத்தகை மற்றும் கைமாற்றம் மட்டும் அனுமதிக்கப்படும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஒ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படாவிட்டால் செலுத்தவேண்டிய நிலுவை குத்தகைப் பணத்தின் 10% தண்டப்பணமாக அறவிடப்படும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. ஆர்.ஏ.ரீ சகுந்தலா விஜேசுந்தர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகதமெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, செத்தெம்பர் 16.

09 - 374